வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.07.2024 புதன்கிழமை இதழ் : 199 பக்கங்கள் : 12

# இந்த மாதத்தின் இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலுக்கு திகதி

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 17


**ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பகட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. தேர்தலுக்கான திகதி இந்த மாதத்தின் இறுதிக்குள் அறிவிக்கப்படும். அரசமைப்பு ஏற்பாடுகள், ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம் - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த காலங்களை விட மக்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர். எனவே, சுதந்திரமான - நீதியான தேர்தலை நடத்த சகல தரப்பினரும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அவர் கோரினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் குறித்து எழுப்பப்படும் மாறுப்பட்ட கருத்துகள் குறித்து மக்களை தெளிவுபடுத்தும் பொறுப்பு

11



## பாரிஸில் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தினார் ஈழத்தமிழர் தர்சன்!

பாரிஸ், ஜூலை 17

ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய ஈழத் தமிழர் என்ற பெருமையை செல்வராஜா தர்சன் பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டி பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதையொட்டி ஒலிம்பிக் தீபம் பாரிஸ் நகரை வலம் வருகிறது. ஒலிம்பிக் தீபத்தை அஞ்சலோட்டமாக ஏந்தி வருவதற்கு பாரிஸ் நகர சபை 345 பேரை தெரிவு செய்தது. இதில், புலம்பெயர் ஈழத் தமிழரான செல்வராஜா தர்சனும் ஒருவராவார்.

இந்த நிலையில், பாரிஸ் நகரில் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை

11

## அரசமைப்பில் மாற்றம் இப்போது அவசியமில்லை!

### சட்டத்தரணிகளின் ஒன்றிணைவு

கொழும்பு, ஜூலை 17

அரசமைப்பில் தற்போது மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் இல்லை. முன்மொழியப்பட்ட சட்டத் திருத்தம் தேவையில்லாமல் விடயத்தை குழப்பி தேர்தல் நடைமுறைகளை சீர்குலைக்கும் முயற்சியாக இருக்கலாம் - என்று சட்டத்தரணிகளின் ஒன்றிணைவு என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள அரசமைப்புக்கான 22ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் 30 நாட்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பை

11

## மருத்துவர் அர்ச்சுனாவுக்கு பிணை; எதிராக ஐந்து வழக்குகள் தாக்கல்!

தென்மராட்சி, ஜூலை 17

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இ. அர்ச்சுனா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவர் மருத்துவ மனையின் பணிமனைகளுக்குள் நுழைவதற்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதேநேரம், மருத்துவர் அர்ச்சுனா ஏனைய மருத்துவர்கள்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் இன்று புதன்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்க வேண்டும். அவ்வாறு வாக்குமூலம் அளிக்காத பட்சத்தில் அவர் மீது மற்றொரு வழக்கை தொடுக்க முடியும் என்று பொலிஸாருக்கு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை குறித்த விவகாரத்தால் அதன் அப்போதைய பதில் மருத்துவ

11

## பருத்தித்துறையில் நேற்று 17 பேர் கைது!

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறை கடற்கரையோரங்களில் நேற்று நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையில் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரையோர பிரதேசங்களில் 'யுக்திய'

11



## உமாமகேஸ்வரனின் சிலை வவுனியாவில் திறந்துவைப்பு!

வவுனியா, ஜூலை 17

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) செயலதிபருமான உமாமகேஸ்வரனின் உருவச்சிலை வவுனியாவில் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அண்மையாக அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் சிலையை புளொட்டின் தற்போதைய தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற

11

## அ'புரத்தில் நிலநடுக்கம்!

கொழும்பு, ஜூலை 17

அநுராதபுரம் - கந்தளாய்க்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நிலநடுக்கம் ஒன்று பதி வானதாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இது 2.7 ரிக்டராக பதிவாகியுள்ளது. அநுராதபுரத்திலிருந்து கிழக்கே 41 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது

இதனால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

11



## கொக்குத்தொடுவாய் புதைகுழி மூடப்பட்டது

முல்லைத்தீவு, ஜூலை 17

கொக்குத்தொடுவாயில் தோண்டப்பட்ட மனித புதைகுழியின் ஒரு பகுதி நேற்று செவ்வாய்க்கிழமை மூடப்பட்டது. காணாமல் போனோர் பணியக அதிகாரிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆகிய தரப்புகள் முன்னிலையில் புதைகுழியை முழுமையாக மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11

## கிளிநொச்சியில் டிப்பர்மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 17

பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி வேகமாக பயணித்த டிப்பர் வாகனம்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

பூநகரி - பரந்தன் வீதியில் குடமுருட்டி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், கிளிநொச்சியை சேர்ந்த ஆறுமுகம் நிதர்சன் (வயது - 23) என்பவரே காய மடைந்தார்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை சோதனையிடுவதற்காக பொலிஸார் மறித்துள்ளனர். ஆனால், அதன் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் வேகமாக செலுத்திச் சென்றுள்ளார்.

சுமார் 13 கிலோமீற்றர்

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கனடாவின் மொன்றியல் நகரத்திலிருந்து 'ஈழநாடு' வாசகர் கே. அருண் ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார். அந்த மின்னஞ்சல் இந்தப் பத்தியைப் பற்றி பேசுவதால் அதனை இங்கே தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுவதால் முதலில் அதனை அப்படியே தருகின்றேன்.

"செத்துப் போனவர்களைப் பற்றி விமர்சிப்பது மனுதர்மம் அல்ல, என்றிருந்தும் கடந்த சனிக்கிழமை ஈழநாடு பத்திரிகையின் 'இப்படியும் நடக்கிறது' பகுதியில், ஊர்க்குருவியாரின் பதிவு அடியேனையும் சில கருத்துகளை எழுத வைத்திருக்கிறது.

மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் ஐயாவின் 'எக்ஸ்' தளப்பதிவை கருவாகக் கொண்டு "மறைந்த மூத்த தமிழ் அரசியல்வாதி அமரர் சம்பந்தன் ஐயா ஒரு தோல்வியடைந்த அரசியல்வாதி என்று பலர் எழுதுகிறார்கள். இதுவரை வெற்றிபெற்ற தமிழ் அரசியல்வாதி யார்? என கேள்வி எழுப்பியிருப்பதாகவும் சம்பந்தன் ஐயா தோல்வியடைந்த அரசியல்வாதிதான்" என்பது தொக்கிநிற்க மறைமுகமாக சொல்லியிருக்கிறார் என்று ஊர்க்குருவியார் எழுதியிருக்கிறார்.

உண்மையில், அமரர் சம்பந்தன் ஐயா உயிரோடு இருக்கும்வரை யாராவது அவரை 'தோல்வியடைந்த அரசியல்வாதி' என்று எழுதியிருக்கிறார்களா? என்பது எனது கேள்விக்கணை?

உண்மையில், அன்னார் மறைவதற்கு முன்னரே அவரின், தமிழ் மக்கள்மீதான தமிழர் அரசியலில் ; 'தோல்வியடைந்த அரசியல்வாதி' என்பதில் மறு கருத்தில்லை.

"நாடு பிளவுபட்டுவிடக் கூடாது என்பதில் அக்கறையோடு இருந்தார் என்றும் அதனை அவர் தன்னிடமே கூறியிருக்கிறார் எனவும் ஜனாதிபதி அன்னாரின் அஞ்சலி உரையின்போது கூறியிருந்தமையையும்" கோடிட்டுக்காட்டியிருந்தமை சாட்சியமில்லாத ஒரு பதிவாக இருப்பினும், "எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இந்திய பிரதமரின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு சென்றால், அது சிங்கள மக்களை ஆத்திரப்படுத்தும் என்று நினைத்து அங்கு செல்வதையே தவிர்த்துக்கொண்டார்" எனும் பதிவு ஜனாதிபதியின் அஞ்சலி உரைக்கு சாட்சியம் சேர்க்கிறது.

"தேர்தல் வெற்றிக்காக தமிழீழக் கோரிக்கையை முன் வைத்தோமே தவிர, உண்மையில் நாங்கள் அதனைக் கோரவில்லை என்று சம்பந்தன் ஐயாவே தெரிவித்திருக்கிறார் எனும் பதிவு - நம்பி வாக்களித்த தமிழர்களை எந்தளவுக்கு ஏமாற்றியிருக்கிறார் என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

"அமரர் என்போர் மறைந்த பின்பும் மக்கள் மனதில் அமர்பவரே அமரர் என்பார்கள்", யதார்த்தபூர்வமாக ஐயா இன்னும் பிழைத்து வாழும் தமிழ் மக்களின் மனங்களில் அமர்ந்திருக்கும் அமரரே", ஏனென்று கேட்டால், ஒவ்வொரு பொங்கலுக்கும் தீபாவளிக்கும் புது வருடத்துக்கும் ஐயாவை நினைக்காமல் இருக்க முடியாது."

இதுவே அந்த வாசகர் அனுப்பியிருந்த கருத்து.

முதலில் அவர் குறிப்பிடும் மனுதர்மம் பற்றிப் பார்ப்போம். இறந்து போனவர்களைப் பற்றி பேசுவது மனுதர்மம் ஆகாது என்கிறார். அது அவர் இறந்த செய்தி வெளிவந்ததும் அல்லது அவரின் அஞ்சலி நிகழ்வுகள் நடப்பதற்கு முன்னர் வேண்டுமானால் சரியானதாக இருக்கலாம். ஆனால், அதற்கு பின்னரும் அவர் பற்றி விமர்சிக்கக் கூடாது என்பது அவரைப் போன்ற தலைவர்களுக்கு பொருத்தமானதா என்பது தெரியவில்லை. அவர் செய்த சரி, பிழைகளை விமர்சிக்காவிட்டால், அவருக்குப் பின்னர் வருகின்ற அரசியல்வாதிகளும் அதையே செய்யவும் அதுவே வழிசமைத்து விடுமே. காய்த்தல் - உவர்த்தல் இன்றி அவர் பற்றி விமர்சித்தால் மாத்திரமே இனி வருகின்ற தலைவர்களும் தமது ஒவ்வொரு நடவடிக்கையையும் நிதானமாக அடியெடுத்து வைப்பார்கள்.

இனி இன்று எழுதவந்த விடயத்துக்கு வருவோம்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவரை தெரிவுசெய்வதற்காக அண்மையில் அதன் எம். பிக்கள் கூடி ஆராய்ந்த செய்தி வாசகர்கள் அறிந்ததுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இல்லை என்றாலும் தமிழ் அரசு கட்சியின் எம். பிக்கள் அனைவருமே கடந்த தேர்தலை சந்தித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத்தான். உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ் அரசு தனித்து செல்ல மற்றைய பங்காளிகள் மேலும் மூன்று கட்சிகளுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக இயங்கினாலும் பாராளுமன்றத்தில் அனைவருமே தமிழ் அரசு எம். பிக்கள்தான். இதனால்தான் சம்பந்தரின் மறைவையடுத்து, ரெலோ தலைவர் செல்வம் தனக்கு அந்தப் பதவியை வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்க - அதுபற்றி ஆராய்வதற்காகவே எம். பிக்கள் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் செல்வத்துக்கு அதனை வழங்க தமிழ் அரசின் சிறீதரன்- சார்ள்ஸ் அணியினர் சம்மதம் தெரிவித்தபோதிலும் சுமந்திரன் அணி அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அதுவும் எதிர்பார்த்த ஒன்றுதான் என்பதால் யாருக்கும் ஆச்சரியத்தைத் தந்திருக்காது.

ஆனால் அந்தக் கூட்டத்தின் பின்னர், தமிழ் அரசு கட்சிக்காரர்கள் தமக்குள் அதுபற்றி விவாதித்தபோதும், அங்கும் இரண்டு அணிகளும் விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லாததால் முடிவெடுக்க முடியவில்லையாம். சுமந்திரன் அந்தப் பதவி தனக்கு வேண்டும் என்று கோரிக்கை வைக்க, இல்லை செல்வத்துக்கு கொடுக்க முடியாவிட்டால் அது தனக்கே தரப்படவேண்டும் என்று சிறீதரன் விடாப்பிடியாக நிற்க, கூட்டம் முடிவின்றி 'சுமுகமாக' முடிந்திருக்கின்றது.

இனி என்ன அடுத்த பாராளுமன்றத் தேர்தல்வரை அந்தப் பதவி காலியாகவே இருக்கும். இல்லையெனில், இரண்டு அல்லது மூன்று குழுக்களாக மாறினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.!

- ஊர்க்குருவி

## நல்லூர் கந்தன் பெருந்திருவிழா; மக்களுக்கான நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதையொட்டி பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவின் புற ஏற்பாடு தொடர்பாக நேற்று முன்தினம் மாநகர ஆணையாளர் தலைமையில் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

ஆலயச் சூழலில் 07.08.2024 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 04.09 .2024 நள்ளிரவு வரை ஆலய வெளி வீதியின் ஊடான போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டி ருக்கும்.

பிரதான வீதித் தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம் அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச் சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார, பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்ப மேற்படி வீதித்தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்திசந்தியை அடைந்து யாழ். நகரை அடைய முடியும். யாழ். நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும்.

விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச் சந்தியால் திரும்பி கச்சேரி - நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும். கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

தூக்குக் காவடிகள் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக உள்நுழைந்து சிறீ முருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிராக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

ஆலய வீதிச்சூழலில் வீதித் தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

திருவிழா காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது, ஆலய வெளி வீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளி பரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

திருவிழா காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும், ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது ஆலய சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும், விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் திருவுருவப் படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், ஆலயச் சூழலில் ட்ரோன் கமெராக்களைப் பயன்படுத்தி காணொலி பதிவு செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ்மா அதிபர், நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, யாழ் மாவட்ட தனியார் பஸ் சங்கம், பிரதேச செயலகம் நல்லூர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை சாரணர் சங்கம், அன்னதான மடங்கள், தண்ணீர்பந்தல் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ஐ)

### இன்று ஆடிப் பிறப்பு;

## பனங்குட்டான் விற்பனை யாழில் நேற்று அமோகம்!



யாழ்ப்பாணம், ஜூலை 17

சைவ தமிழ் மக்கள் கொண்டாடும் ஆடிப் பிறப்பு இன்றாகும். இதையொட்டி, பனங்கட்டி விற்பனை நேற்று யாழ்ப்பாணத்தில் சூடுபிடித்திருந்தது.

ஆடிப்பிறப்பை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் மக்கள் பொருட்கள் கொளவனவில் ஆர்வம் காண்பித்தனர். யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மருதனாரமடம், கல்வியங்காடு சந்தைகளில் பனங்கட்டி விற்பனையும் அமோகமாக நடைபெற்றது.

அத்துடன், ஆடிக்கூழ் காய்ச்சுவதற்கான பொருட்களை கொள்வனவு செய்வதிலும் மக்கள் ஆர்வம் காட்டினர். 120 ரூபாய் முதல் பனங்குட்டானின் அளவுக்கேற்ப பல்வேறு விலைகளில் விற்பனையாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வரி ஏய்ப்புக்கு புதிய சட்டம்!

கொழும்பு, ஜூலை 17

புதிய வரிகளை விதிக்கும் முன்னர், வரி ஏய்ப்பு செய்த மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்காக, தற்போதைய சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு, இவ்வாறு வரி ஏய்ப்பு செய்பவர்களிடம் இருந்து வரியை வசூலிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "ஏதேனும் ஒரு வழியில் வரி செலுத்துவதில் சிரமம் இருந்தால், அது குறித்து மேல்முறையீடு செய்யவும், நீதிமன்றத்தை நாடவும் அவர்களுக்கு உரிமை உண்டு. மாதம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் நிகர வருமானம் உள்ளவர் மட்டுமே வரி செலுத்த வேண்டும். வேறு இடத்தில் வரி செலுத்தியிருந்தால், மீண்டும் வரி செலுத்த வேண்டியதில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.07.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆடி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சி முதன்மையான கட்சியா?

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு - தமிழர் கோரிக்கைகள் தோற்கடிக்கப்படும் ஆபத்து உண்டு என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான இரா. சாணக்கியன் தெரிவித்திருக்கின்றார். தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களிக்காதுவிட்டால் என்ன செய்வது? பின்னர் எவ்வாறு நாம் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டை தெரிவிக்க முடியும்?

தர்க்கரீதியில் இவ்வாறான கேள்விகளில் பொருள் உண்டு. ஆனால், ஏன் அவ்வாறானதொரு சவாலை எதிர்கொள்ள முடியாது? தமிழ் அரசு கட்சி தமிழ் மக்களை வழிநடத்தும் ஒரு முதன்மையான கட்சி என்றால் ஏன் இந்த சவாலை தமிழ் அரசு கட்சியால் எதிர் கொள்ள முடியாது? இந்த சவாலை எதிர்கொள்ள முடியாதளவுக்கு தமிழ் அரசு கட்சி பலவீனமடைந்திருக்கின்றதா?

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் உரையாடப்பட்ட காலத்திலிருந்து அது தொடர்பில் தொடர்ந்தும் ஒரு பதற்றம் நிலவுகின்றது. இந்தப் பதற்றம் இரண்டு வகையானது. ஒன்று, மக்கள் வாக்களிக்காது விட்டால் என்ன செய்வதென்று கூறுவோர் ஒருபுறம் என்றால், மறுபுறம் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரின் வெற்றியை விரும்புபவர்கள் - அதற்காக உழைக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் அவ்வாறான உறுதி மொழியை வழங்கியிருப்பவர்கள் இந்த நிலைப்பாட்டைக் கண்டு அஞ்சுகின்றனர். அவர்களே, இந்த விடயத்தைத் தோற்கடித்தே ஆகவேண்டுமென்று பேசி வருகின்றனர்.

ஒருவேளை, தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டால் என்ன செய்வது என்னும் அச்சம் எங்கிருந்து வருகின்றது? தமிழ் அரசுக் கட்சி மக்களை வழிநடத்துவது உண்மையென்றால் இவ்வாறானதோர் அச்சம் தமிழ் அரசு கட்சியை சேர்ந்தவர்களிடமிருந்து வெளிவர முடியாது. இந்த விடயம் ஏனைய கட்சிகளுக்கும் பொருந்தும்.

எவரெல்லாம் இவ்வாறான சந்தேகத்தை முன்வைக்கின்றனரோ - அவர்கள் மக்களுடன் இல்லை என்பதுதான் உண்மை. மக்களுடன் மக்களாக ஊடுருவியிருக்கும் ஒரு கட்சி ஒரு போதுமே சவால்களை கண்டு விலகாது. குறிப்பிட்ட அரசியல் சூழலில் சவால்களை எதிர்கொள்வதுதான் ஒரு முதன்மையான அரசியல் கட்சியின் பணியாகும். ஏனெனில், அரசியல் கட்சியென்பது ஓர் அரசியல் ஸ்தாபனம். ஓர் அரசியல் ஸ்தாபனத்தால் அரசியல் சவால்களை எதிர்கொள்ள முடியாது போனால் அவ்வாறானதொரு கட்சி தொடர்ந்தும் தன்னை முதன்மையான கட்சியென்று வாதிட்டுக்கொண்டிருக்க முடியாது. இதனை தமிழ் அரசு கட்சியால் புரிந்துகொள்ள முடிகின்றதா?

தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அதனை அனுபவிக்க முடியாமல்போன சிவஞானம் சிறீதரன் தலைமையிலான ஓர் அணியினர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றனர். இதேபோன்று, தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராசாவும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகக் கூறுகின்றார். கட்சியின் தற்போதைய தலைவர், அதிக வாக்குளால் தெரிவான சிறீதரன் ஆகியோர் சரியென்று கருதும் ஒன்றை ஏன் கட்சியின் நிலைப்பாடாக உறுதியாக முன்வைக்க முடியாமல் இருக்கின்றது? இதனைத் தடுக்கும் காரணம் என்ன? தெற்கின் மீதான விசுவாசமுள்ளவர்கள் கட்சிக்குள் அதிகளவில் ஊடுருவியிருக்கின்றனரா அல்லது தமிழ் அரசு கட்சி அதன் முதன்மையான இடத்தை இழந்துவிட்டதா? அதனால்தான் இந்தச் சவாலை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றதா?

# குழந்தையும் இரு பெண்களும் கருகம்பனை விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு பெண்களும் குழந்தை ஒன்றும் காயமடைந்தனர்.

கீரிமலை - கருகம்பனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளில் குழந்தையுடன் பயணித்த இரு பெண்களை பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு தப்பிச் சென்றது.

விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்களில் பயணித்த இளைஞர்கள் போதையில் இருந்தனர். அவர்கள் நிதானமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியிருக்கவில்லை என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் அளித்த தகவலின் அடிப்படையில் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட இளைஞர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணை நடத்தி வரும் இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிறை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 17

பூஸா சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகரின் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத இருவர், அவரின் குடும்பத்தினரை அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் காரணமாக குறித்த அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# 5 உணவகங்களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை!

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறை நகரில் 5 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நகரின் பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 5 உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்த நிலையங்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ-02)

# யுனெஸ்கோ பணிப்பாளர் ஜனாதிபதியை சந்தித்தார்



கொழும்பு, ஜூலை 17


நேற்றைய தினம் நாட்டுக்கு வருகை தந்த யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யுனெஸ்கோவில் இலங்கை உறுப்புரிமை பெற்று 75ஆவது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 17 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆடி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடிவரும். எதிர்பாராத நன்மை உண்டாகும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள்.வியாபாரத்தில் சில மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். மேலதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டி பார்ப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசு**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
அதிரடியான சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். நீண்ட நாளாக தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டு.

# பொலிஸாரிடமிருந்து தப்பினால் சுட்டுத்தான் பிடிக்க முடியுமாம்!

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி சர்ச்சை

புதுக்கோட்டை, ஜூலை 17

பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பினால் சுட்டுத்தான் பிடிக்க முடியும் என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு தி. மு. கவும் பணம் கொடுக்கவில்லை, பா. ம. கவும் பணம் கொடுக்கவில்லை. அ. தி. மு. கவின் வாக்குகள் தங்கள் கட்சிக்கு கிடைக்



கும் என்று பா. ம. க. நிறுவனர் ராமதாஸ் நினைத்திருந்தார். அது நடக்கவில்லை.

இது, முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியின் சாதனைக்கு கிடைத்த வெற்றியாகும்.

ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பில் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முயன்ற திருவேங்கடத்தை சுட்டுக் கொன்றனர். தப்பிச் செல்லும்போது சுட்டுத்தான் பிடிக்க முடியும். ரவுடிகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆம்ஸ்ட்ராங் கொலைச் சம்பவத்தில் தி. மு. கவினருக்கு தொடர்பு இருப்பதாக கூறினால், அதையும் விசாரிப்பதற்கு முதல்வர் தயாராக உள்ளார். இந்த வழக்கில் ஏதேனும் சதி நடந்திருந்தால் அது புலனாய்வில் தான் தெரியவரும்- என்றார்.

(எ)

# விடியல் என்று கூறிவிட்டு மக்களை இருட்டில் தள்ளுவதே திராவிட மாடல்

## தி. மு. க. மீது தமிழிசை சாடல்

சென்னை, ஜூலை 17

சொன்னதை செய்யாமல், சொல்லாத மின் கட்டண உயர்வை வாக்களித்த மக்களுக்கு பரிசளித்ததுதான் திராவிட மாடல். விடியல் என்று கூறிவிட்டு மக்களை இருட்டில் தள்ளுவதுதான் திராவிட மாடல் - இவ்வாறு தமிழக பா. ஜ. கவின் முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளமை குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தேர்தல் வெற்றிக்காக இலவசங்களை அறிவித்துவிட்டு தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மக்களுக்கு தரும் பரிசு மின் கட்டண உயர்வா? அடுக்குமாடி குடியிருப்பு முதல் ஏழை எளிய மக்கள் வரை வாக்களித்தவர்களுக்கும், வாக்கு அளிக்காதவர்களுக்கும் பரிசா? இந்த மின் கட்டண உயர்வு.

ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும் மின் கட்டண உயர்வை தமிழக அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்" என்று தமிழிசை வலியுறுத்தியுள்ளார்.

(எ)

# "வாக்களித்த மக்களை வஞ்சிக்கும் செயலாகும்"

சென்னை, ஜூலை 17

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார். மின் கட்டண உயர்வு ஒவ்வொரு குடும்பத்தின்மீதும் மாதமொன்றுக்கு சராசரியாக குறைந்தபட்சம் 500 ரூபாய் கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை வாக்களித்த மக்களை வஞ்சிக்கும் செயலாகும் என்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

(எ)

# மக்களை திரட்டி போராடுவோம்!

## பா. ம. க. எச்சரிக்கை

சென்னை, ஜூலை 17

"புதிய கட்டண உயர்வு ஏழை மக்களையும், தொழில் நிறுவனங்களையும் கடுமையாகப் பாதிக்கும். எனவே, மின்சாரக் கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இல்லாவிட்டால் பா. ம. க. மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தும். மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது" என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை 4. 83 சதவீத அளவுக்கு தமிழக அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் மின்சார சபைக்கு ஆண்டுக்கு 6000 கோடி ரூபாய்க்கும் கூடுதலான வருவாய் கிடைக்கும். தமிழக மக்கள் விலைவாசி உயர்வு, வாழ்வாதார பாதிப்பு ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வரிகளை சுமத்தி சர்வாதிகார ஆட்சி

## மின் கட்டண உயர்வுக்கு கண்டனம்

சென்னை, ஜூலை 17

"வரிக்குதிரை மேல் உள்ள வரிகளைக் கூட எண்ணிவிடலாம், எண்ண முடியாத அளவுக்கு வரிகளையும், கட்டண உயர்வுகளையும் மக்களின் மீது சுமத்தி சர்வாதிகார ஆட்சி நடத்தி வரும் தி. மு. க. ஆட்சியாளர்களால் தமிழக மக்கள் வேதனையில் துடிக்கின்றனர்" என்று மின் கட்டண உயர்வுக்கு அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிச்சாமி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



தமிழக மக்களை அனைத்து வகைகளிலும் வாட்டி வதைப்பதற்கென்றே ஒரு ஆட்சி தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சியாக நடந்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவே மாட்டேன்!

**நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்**

கொழும்பு, ஜூலை 17

**கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், ஒற்றை யாட்சியையும் காட்டிக்கொடுப்பதற்கு தயாரில்லை என்று அறிவித்துள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச.**



ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவரவுள்ள நிலையிலேயே சிலருக்கு 19 ஆவது திருத்தச்சட்டம் நினைவுக்கு வந்துள்ளது எனவும், எந்த வகையிலும் தேர்தலை பிற்போட இடமளியோம் எனவும் நாமல் ராஜபக்ச கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரகலயவை முன்னின்று நடத்தியவர்களில் சிலர் அரசியல் கட்சிகளில் இணைந்துள்ளனர், வன்முறை மூலம் அல்ல, ஜனநாயக வழியிலேயே ஆட்சியை பிடிக்க முடியும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அதேபோல அறிவிருந்தும், தெளிவிருந்தும் சில இளைஞர்கள் தவறாக வழிநடத்தப்பட்டமை கவலையளிக்கின்றது. ஒரு கட்சியாக எந்தவொரு சவாலையும் ஏற்பதற்கு நாம் தயார். கட்சியின் அடிப்படைக் கொள்கையை காட்டிக்கொடுக்ககூடாது, ஒற்றையாட்சியையும் காட்டிக்கொடுக்கக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைப்பதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில்தான் 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் தொடர்பில் சிலருக்கு நினைவு வந்துள்ளது. 20 மற்றும் 21 ஆவது திருத்தச் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டு விட்டன. அதுவரை அவர்களுக்கு 19 பற்றி நினைவில்லை போலும். இப்படியான புத்திஜீவிகளும் எமது நாட்டில் உள்ளனர். தேர்தல் நெருங்கும்வேளையிலேயே 5 வருடங்களா, 6 வருடங்களா என்ற சிந்தனை கூட சிலருக்கு எழுகின்றது.

எது எப்படி இருந்தாலும் தேர்தலை பிற்போடுவதற்கு நாம் எதிர்ப்பு. அதற்கு இடமளிக்கமாட்டோம். அதேவேளை தேசிய வளங்களை நாம் பாதுகாப்போம். அவற்றை மேம்படுத்துவதற்குரிய முதலீடுகள் கொண்டுவரப்படும்-என்றார்.

## தற்போதைய அரசாங்கத்தின் மீதான மக்களின் மதிப்பு 3 மடங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 17

தற்போதைய அரசாங்கத்தின் மீதான மக்களின் மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக "வெரிட்டி ரிசேர்ச்" நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் நடத்திய நாடளாவிய ரீதியான கருத்துக் கணிப்பின் ஜூலை மாத அறிக்கையின்படி, கடந்த பெப்ரவரி மாதத்தை விட அரசின் மீதான மக்களின் மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 7 வீதமாக இருந்த தற்போதைய அரசாங்கத்தின் மீதான மக்களின் மதிப்பு இம்மாதம் 24 வீதமாக அதிகரித்துள்ளது.

கணக்கெடுப்பின்படி, தற்போதைய பொருளாதார நிலைமை நன்றாகவோ அல்லது சிறப்பாகவோ இருப்பதாக 28 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு வருவதாக 30 சதவீதம் பேர் கூறியதாக "வெரிட்டி ரிசர்ச்" நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், ஜூலை மாதத்தில் 85,000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஜூலை 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 85,426 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு 1,095,675 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் அதிகமானோர் இந்தியாவிலிருந்து வந்துள்ள நிலையில் அதன் எண்ணிக்கை 207,966 ஆகும்.

ரஷ்யாவிலிருந்து 116,019 சுற்றுலாப் பயணிகளும், பிரிட்டனில் இருந்து 97,055 சுற்றுலாப் பயணிகளும் வந்துள்ளனர்.

இது தவிர, ஜேர்மனி, சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## ஈரானுக்கு நான்கு மாதங்களில் 4.1 மில்லியன் கிலோ தேயிலை!



கொழும்பு, ஜூலை 17

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், தேயிலை ஏற்றுமதியின் ஊடாக ஈரானுக்குச் செலுத்த வேண்டிய எண்ணெய்க்கான கடனை இலங்கை கடந்த வருடம் ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் செலுத்த ஆரம்பித்துள்ளது-என்று இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அந்த உடன்படிக்கையின் கீழ், தேயிலை ஏற்றுமதியின் மூலம் பெற்றோலியத்துக்காக ஈரானுக்குச் செலுத்த வேண்டிய 250.9 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அந்த கடனில் இதுவரை 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது.

2024 இன் முதல் 4 மாதங்களில், 4.1 மில்லியன் கிலோ தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, இது 2023 இன் முதல் 4 மாதங்களில் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவை விட மூன்று மடங்கு அதிகமாகும்-என்றார். (அ)

## இ.போ.சவுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 370 பேருக்கு நியமன கடிதங்கள் வழங்கல்

கொழும்பு, ஜூலை 17

இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடத்துநர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 370 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கொழும்பு சம்புத்தத்வ ஜயந்தி மந்திர கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேல்மாகாண டிப்போக்களில் உள்ள சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மேல் மாகாணத்தில் தமக்கு ஒதுக்கப்பட்ட டிப்போவில் மூன்று வருடங்கள் கடமையாற்ற வேண்டும் எனவும் எந்தவொரு அரசியல் செல்வாக்கினாலும் மாற்றம் செய்யப்பட மாட்டாது எனவும் அமைச்சர் வலியுறுத்தினார். (அ)

## கடும் காற்று மேலும் நீடிக்கும்

கொழும்பு, ஜூலை 17

இயங்குநிலை தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி நிலைமை காரணமாக நாடு முழுவதும் தற்போது நிலவும் காற்று நிலைமை மேலும் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (அ)

# வைத்திய பயிற்சி ஆரம்பிக்க முன்பே பயிற்சி பெற்ற வைத்தியர் என தன்னை அடையாளப்படுத்தி சிகிச்சை வழங்கிய மருத்துவ மாணவி!

கொழும்பு, ஜூலை 17

வைத்திய பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன்பே பயிற்சி பெற்ற வைத்தியர் என தன்னை அடையாளப்படுத்தி தனியார் மருத்துவமனை ஒன்றில் 6 மற்றும் 8 வயதுடைய சட்டத்தரணி தம்பதியரின் இரண்டு பிள்ளைகளுக்கு வைத்திய சிகிச்சை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மருத்துவ மாணவியை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணவெல உத்தரவிட்டார்.

கடந்த 3ஆம் திகதி கொலன்னாவை பிரதேசத்தில் உள்ள வைத்திய நிலையமொன்றுக்கு சென்ற சட்டத்தரணி ஹூசைன் அஸார் சைதுன் மற்றும் சட்டத்தரணி பாத்திமா ஜூதைன் ஆகியோர் தமது இரண்டு பிள்ளைகளுக்கும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்திய சிகிச்சையின் பின்னர் அவர்களின் உடல் நிலை மோசமடைந்ததையடுத்து, சந்தேக நபரான வைத்தியருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டு, மருத்துவச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி மருத்துவச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரபூர்வ முத்திரையில் மற்றொரு வைத்தியரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் இது தொடர்பில் வினவியபோது, எவருக்கும் வைத்தியச் சிகிச்சை வழங்குவதற்குத் தான் தகுதி பெற்றுள்ளதாக சந்தேக நபரான பெண் தெரிவித்த நிலையில், அதன் பிரகாரம் வெல்லம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின்படி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவ்வாறான சந்தேக நபர் அல்லது மேற்படி தகவல் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பில் சட்டத்தரணி தம்பதியினரும் ஏனைய சட்டத்தரணிகள் குழுவொன்றும் மேலதிக நீதவானிடம் தெரிவித்திருந்தனர்.

இதன்படி, சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை அழைத்த மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணவெல, சந்தேகத்திற்குரிய மருத்துவ மாணவி செய்தது கொலை முயற்சிக்கு சமமான குற்றம் என குறிப்பிட்டு அவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உரிய அனுமதி இன்றி மருத்துவத் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட அஜ்ரா நியாஸ் என்ற சந்தேக நபரான பெண் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் ஆட்சியை காக்க விரைவில் புதிய சட்டங்கள்!

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 17

**எமது நாட்டில் அரசாங்கத்தினால் செய்ய வேண்டிய விடயங்களைச் செய்யாமலும் செய்யக்கூடாத விடயங்களை செய்ததாலும் நாடு சீரழிந்துள்ளது. அதனால் நாட்டின் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் வகையில் மேலும் பல புதிய சட்ட திருத்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என மக்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் மாற்றத்தை ஏற்படுத்த விருப்பம் உள்ளவர்கள் ஆட்சியில் இருக்கவேண்டும். நாட்டில் இருக்கும் பிரதான சட்டங்களில் திருத்தம் மேற்கொண்டு புதிய சட்டங்களை கொண்டு வர தேவையான வரைவை நாங்கள் தயாரித்துள்ளோம். அதனால் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமானவர்களை ஆட்சியாளர்களாக தெரிவு செய்யும் பொறுப்பு மக்களிடமே இருக்கிறது. எதிர்வரும் காலங்களில் விவாகரத்து சட்டம் உள்ளிட்ட பல புதிய சட்ட திருத்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம்.

எமது நாட்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளவேண்டிய விடயங்களை செய்யாமலும் செய்யக்கூடாத விடயங்களைச் செய்ததாலும் நாடு சீரழிந்துள்ளது. அதன் பெறுபேறுகளை நாங்கள் கடந்த காலங்களில் கண்டுகொண்டோம். நாட்டில் மத்தியஸ்த சபை முறைமையினால் நீதிமன்றங்களுக்குச் செல்லும் இலட்சக்கணக்கான வழக்குகள் குறைவடைந்துள்ளன. இதனால் எமது நாட்டில் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு, குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளன. 2015ஆம் ஆண்டில் மத்தியஸ்த சபைகளுக்கு முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 2023ஆம் ஆண்டில் அதனை 10 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

மேலும் மத்தியஸ்தர் சபைக்குக் கடந்த வருடம் 3 இலட்சத்து 11ஆயிரம் முறைப்பாடுகள் மத்தியஸ்தம் செய்துவைப்பதற்காக வந்திருந்தன. அவற்றில் நூற்றுக்கு 70 வீதம் தீர்க்கப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தால், நீதிமன்றங்களில் வருடத்துக்கு மேலும் ஒரு இலட்சம் வழக்கு விசாரணைகள் அதிகரிக்கின்றன.

கடந்த காலங்களில் நாங்கள் சட்ட கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி, பல புதிய சட்ட திட்டங்களை அனுமதித்துக்கொண்டோம். மாற்றம் ஒன்று தேவை எனத் தெரிவித்தவர்களுக்கு ஒரு புள்ளியேனும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டாலும் நாங்கள் அந்த மாற்றத்தை ஏற்படுத்தினோம். சட்ட வரைபை பலப்படுத்தினோம். விவாகரத்து தொடர்பான சட்டத்தை இலகுபடுத்தி புதிய சட்ட திருத்தங்களை மேற்கொண்டோம். அதனைஅடுத்த மாதம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க இருக்கிறோம். ஏனெனில் ஒருசில விவாகரத்து வழக்குகள் பல வருடங்களாகியும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இதனால் ஒரு தரப்புக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

அதேபோன்று குற்றவியல் சட்டம், போலி ஆவணங்கள் தயாரிப்பு போன்ற குற்றங்களுக்கான தண்டனைகளை கடுமையாக்க இருக்கிறோம்-என்றார்.

# தேயிலை ஏற்றுமதி வருமானம் உயர்வு!




கொழும்பு, ஜூலை 17

கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு பதிவாகியிருந்த விவசாய ஏற்றுமதி வருமானத்தின் பாதகமான நிலைமையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக இந்த முன்னேற்றம் சாத்தியமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 உடன் ஒப்பிடும்போது, 2023 இல் விவசாய ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. அதன்படி எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் காரணமாக 2024 இன் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சியை உருவாக்க முடிந்தது.

இக்காலத்தில் நிலவிய காலநிலை விவசாயத்துக்கு சாதகமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். இத்தகைய சவால்களை எதிர்கொண்டு அடைந்த முன்னேற்றம் உண்மையில் வெற்றியாகும் என்பதையும் கூறவேண்டும்.

உதாரணமாக, 2023 ஏப்ரல் மாதமாகும்போது, தேயிலை மூலம் கிடைத்த 407.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம், 2024 ஏப்ரல் மாதத்தில் 450.5 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், 2023 ஏப்ரல் மாதத்திற்குள் தேங்காய் ஏற்றுமதி மூலம் 212 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்தது. அது 2024 ஏப்ரல் மாதமாகும்போது 263 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் மாதத்தில் 299 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2024 ஏப்ரல் இல் 335 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், இதே காலப்பகுதியில் கறுவா ஏற்றுமதி வருமானம் 53.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 56.1 மில்லியனாகவும், மிளகு ஏற்றுமதி வருமானம் 13.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 14 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது-என்றார்.

(அ)

# நாட்டின் தொழிற்சங்கங்கள் புற்றுநோயைப் போன்றவை

கொழும்பு, ஜூலை 17

தொழிற்சங்கங்கள் புற்றுநோய் போன்றவை என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டார்.

தொழிற்சங்கங்கள் நிறுவன ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட குற்றவாளியொருவரின் படத்துடன் சுவரொட்டி வெளியிடப்பட்டமை குறித்தும் பொலிஸ்மா அதிபர் கருத்து வெளியிட்டார்.

இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மஹரகம பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், உயிரிழந்த குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்களை போற்றும் நபர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயல்வதாகவும் தெரிவித்தார்.

குற்றவாளிக் கும்பல்கள் மத்தியிலான மோதல்கள் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர், இதனை சகித்துக்கொள்ளப் போவதில்லை எனவும் கடும் எச்சரிக்கை விடுத்தார். (அ)

# ராஜபக்ஷ தரப்புடன் சேர்ந்த சனத் நிஷாந்தவின் மனைவி?

கொழும்பு, ஜூலை 17

பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட உறுப்பினர் கோகிலா குணவர்தன தற்போது முழுவதுமாக ரணில் பக்கம் இணைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியை ராஜபக்ஷ தரப்புடன் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ தலைமையில் திவுலப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் சட்டத்தரணி சமரி பிரியங்கா பகிரங்கமாக ராஜபக்ஷ அணியிலிருந்து அரசியலுக்கு பிரவேசித்துள்ளார்.

அந்த கூட்டத்தில் கம்பஹா மாவட்டத்தை பிரநிதித்துவப்படுத்தும் கோகிலா குணவர்தன பங்குபற்றாமை அவதானிக்கப்பட்டது.

சனத் நிஷாந்த திடீர் விபத்தால் உயிரிழந்ததையடுத்து அது சந்தேகத்திற்குரியது என அவரது மனைவி சமரி பிரியங்கா குற்றப்புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதேவேளை, சனத் நிஷாந்தவின் வெற்றிடத்தை நிரப்ப அரசியலுக்கு பிரவேசிக்குமாறு அழைப்பு விடுத்தால் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

(அ)

# லொஹான் ரத்வத்தையின் கருத்து ஆபத்தான தொனியை காட்டுகிறது

## ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம்

கொழும்பு, ஜூலை 17

நான் அரசியலில் இருக்கும் வரை ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாவதற்கு அனுமதிக்கமாட்டேன் என இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்துள்ளமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

தேர்தல்களில் தலையீடுகள், வன்முறைகள் குறித்த இலங்கையின் வரலாற்றை கருத்தில் கொள்ளும்போது இந்த அறிக்கையில் ஆபத்தான தொனி தென்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்தார்.

வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதை தடுப்பதற்கான உரிமை எந்த அரசியல்வாதிக்கும் இல்லை என அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை நான் ஏற்றுக்கொள்ளாத அதேவேளை தேர்தலில் ஒரு வேட்பாளர் தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் அல்லது அனுமதிக்கும் உரிமை எந்த அரசியல்வாதிக்கும் இல்லை என அவர் தெரிவித்தார். (அ)

# 4 சிறார்கள் மாயம்!

கொழும்பு, ஜூலை 17

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்தைச் சேர்ந்த நான்கு சிறார்கள் காணாமல்போயுள்ளார்.

முரளிகிருஷ்ணன் லக்சிக்கா (வயது 16), ராஜகுரு மிதுஷா (வயது 16), சுந்தர்ராஜ் தர்ஷினி (வயது 16), மற்றும் ராஜகுரு கோபிசாகர் (வயது 15) ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியே சென்றவர்கள் வீடு திரும்பவில்லை என அவர்களின் பெற்றோர்களால் முறைப்பாடு ஒன்று தலவாக்கலை பொலிஸில் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் உட்பட சிறுமிகள் தமது பெற்றோர்களுக்கு சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியே சென்று காணாமல் போயுள்ளதாக பெற்றோர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு 0764612289, 07715-46724 தொடர்பு கொள்ளுமாறு பெற்றோர்கள் உதவி கோரியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவத்தின் மீது தமிழர்களுக்கு கோபமில்லை!

## சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 17

இலங்கை படையினர் மீது தமிழர்களுக்கு கோபமுள்ளதெனில் எனக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



நேற்று முன் தினம் தென் மாகாணத்தில் இடம்பெற்றுள்ள சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமையவே போர் நடத்தப்பட்டது. போரின் இறுதிக் கட்டத்தில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. மனிதா பிமான நடவடிக்கையின்போது (போர்) 40 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுவதை ஏற்க முடியாது. போரைத் திரிவுபடுத்திக்கூறி நன்மையடையும் சிலர் உள்ளனர். அவர்கள்தான் இவ்வாறான கருத்து களை முன்வைக்கின்றனர். போர் முடிவடைந்து 6 மாதங்களின் பின்னர் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். தமிழ் மக்கள் அமோக ஆதரவை வழங்கினர். மக்கள் அவ்வாறு கொல்லப்பட்டிருந்தால் இப்படி ஆதரவு வழங்கி இருப்பார்களா? இராணுவத்தினர் மீது கோபம் இருந்திருந்தால் வாக்களித்திருப்பார்களா?

புலிகள் மக்களைப் பணயக் கைதிகளாக பிடித்து தமது இருப்பை தக்கவைக்க முற்பட்டனர். ஆனால், நாம் மக்களை பாதுகாத்து போரை முடித்தோம். போரின் இறுதிக் கட்டத்தில் 10, 15 கிலோமீட்டருக்குள் மக்கள் முடங்கியபோது நாம் கனரக ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. சிறு ஆயுதங்களை பயன்படுத்தியே போரிட்டோம். அதனால் தான் குறுகிய காலப்பகுதிக்குள் 2 ஆயிரம் படையினரை இழக்க நேரிட்டது.

போரின் முன்களத்தில் எவ்வித குற்றச்செயல்களும் இடம்பெறவில்லை. போர் முடிந்த பிறகு இடம்பெற்ற ஓரிரு சம்பவங்கள் உள்ளன. இருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவை தொடர்பில் விசாரணைகளை ஆரம் பித்தேன். ஆனால், இரு மாதங்களின் பின் நான் பதவி விலகிவிட்டதால் விசா ரணை தொடரவில்லை. எமக்கு இழப்புகள் ஏற்பட்டபோதும், இறுதி வரை நாம் சர்வதேச விதிமுறைகளின் பிரகாரமே போர் செய்தோம்-என்றார். (அ)

## புத்தர் சிலைகளை உடைத்தவர் கைது

கொழும்பு, ஜூலை 17

புத்தர் சிலை உள்ளிட்ட தெய்வ சிலைகளை உடைத்து, மதங்களை புண்படுத்தும் வகையில் செயல்பட்ட இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இது குறித்த காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியான நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்று முன் தினம் அம்பன்பொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் கல்கமுவ, அம்பன்பொல சமகி மாவத்தையில் வசிக்கும் 22 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டதை அடுத்து, தான் முன்னர் மிகுந்த இறை பக்தியுடன் இருந்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பல ஆண்டுகளாக மிகுந்த பக்தியுடன் கடவுளுக்கு சேவை செய்து வருவதாகவும் கூறினார்.

எனினும், அதனால் எனக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்றும், அதன் காரணமாகவே புத்தர் சிலைகள் மற்றும் தெய்வச் சிலைகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## பறிமுதல் செய்யப்பட்ட இஞ்சி மருந்து தயாரிப்பதற்கு விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 17

இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மருத்துவக் குணம் கொண்ட இஞ்சியை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் 87 வகையான மருந்துகளுக்கு மருத்துவ குணம் கொண்ட இஞ்சி ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதுடன், சந்தையில் மருத்துவ குணம் கொண்ட இஞ்சிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை சுங்கத்தினால் 5020 தொன் மருந்து இஞ்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்துக்கு குறித்த மருந்து இஞ்சியை சலுகை விலையில் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## நுகர்வோர் கோரும்போது அச்சிடப்பட்ட மின் பட்டியலை வழங்குவது கட்டாயம்!

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 17

நுகர்வோர் கோரும் போது அச்சிடப்பட்ட மின் கட்டண பட்டியலை வழங்குவது கட்டாயம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய மின்சார கட்டணத் திருத்தத்துடன் இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விதித்துள்ள ஏழு நிபந்தனைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளரின் கோரிக்கைக்கமைய நீண்ட காலம் வைத்திருக்கக்கூடிய மின் கட்டண பற்றுச்சீட்டு வழங்குவது கட்டாயம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் டக்ளஸ் நாணயக்கார தெரிவித்தார்.

குழந்தைகளை பாடசாலையில் சேர்த்தல், வசிப்பிடத்தை சரிப்பார்த்தல் போன்றவற்றுக்கு அச்சிடப்பட்ட மின் கட்டணச் சொத்து தேவைப்படுவதால் பொதுமக்களின் கோரிக்கையை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (அ)

# 6 ஏக்கர் காணி அனுமதி இன்றி 99 வருட குத்தகைக்கு வழங்கல்

### அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 17

கொழும்பு 02, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான சுமார் 6 ஏக்கர் காணி பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 12 பில்லியன் ரூபாவிற்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

குறித்த காணி தொடர்பான குத்தகை ஒப்பந்தத்தை வரைவதில், இயக்குநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்ட குத்தகை நிபந்தனைகள் தவிர, வேறு நிபந்தனைகளும் சேர்க்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், அதற்கான உடன்படிக்கைகள் வரையப்பட்டமை தொடர்பில் சட்டப் பணிப்பாளரிடம் ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், குறித்த காணியின் அபிவிருத்திப் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள 2 ஏக்கர் மற்றும் 21.4 பேர்ச் காணியை உத்தியோகபூர்வ அனுமதியின்றி குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக அதிகார சபைக்கு 330 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் முறையான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, உண்மைகளை முன்வைத்த தேசிய கணக்காய்வு திணைக்கள அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கியல் முறைமையில் உள்ள சிக்கல் நிலைகளை இனங்கண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# இலங்கை-ஜோர்தான் புரிந்துணர்வு உடன்பாடு

கொழும்பு, ஜூலை 17

இலங்கை மற்றும் ஜோர்தான் அரசாங்கங்கள் பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

அந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தகவல் படி, ஜோர்தானில் உள்ள இலங்கை தூதுவர் பிரியங்கிகா விஜேகுணசேகர மற்றும் ஜோர்தான் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நாயகம் மஜேத் தாலிஜி அல்கதர்னே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதன் மூலம் ஜோர்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்துவதுடன், மக்களிடையே அதிகளவான தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மறுபரிசீலனை செய்வதற்கும், பொதுவான நலன்களின் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் உதவும் என இலங்கைக்கான தூதுவர் கூறினார். (அ)

## ரணிலின் அழைப்பை நிராகரித்தார் சஜித்!

கொழும்பு, ஜூலை 17

தேசத்தைப் பாதுகாப்பதற்கு தமது ஆதரவை வழங்கினால், அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை மீள இணைத்துக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஏனையவர்கள் நிராகரித்துள்ளனர்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் கட்சியின் பிரசார முகாமையாளர் சுஜீவ சேனசிங்க ஆகியோர், நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"தேசத்தைப் பாதுகாப்பதற்காக நாங்கள் அவருக்கு ஆதரவளித்தால் ஐக்கிய தேசியக் கட்சியில் எங்களின் உறுப்புரிமையை மீள இணைத்துக் கொள்ள ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

எவ்வாறாயினும், பொது ஜன பெரமுனவின் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருடன் நாங்கள் மேடையில் இருக்க விரும்பாததால் இந்த வாய்ப்பை ஏற்க நாங்கள் தயாராக இல்லை" என பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா என்ற குழப்பத்தில் ஜனாதிபதி இருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் அவர் முன்னர் கூறியது போல் 15 முதல் 20 வரையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களின் ஆதரவைப் பெற முடியாது. எவ்வாறாயினும், அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது எங்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால், அவர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என விரும்புகிறோம்," என மரிக்கார் மேலும் கூறினார்.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்க போன்ற மறைந்த ஐ.தே.க தலைவர்களின் அபிவிருத்தி பாணியை மீண்டும் ஒருமுறை ஐக்கிய மக்கள் சக்தி வெளிச்சத்துக்கு கொண்டுவரும் என சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மட்டக்களப்பில் வெடிப்பு சம்பவம் இராணுவம், பொலிஸ் விசாரணை

## வானிலிருந்து விழுந்த நீல நிறத்திலான பொருள்




**மட்டக்களப்பு, ஜூலை 17**

**மட்டக்களப்பில் பெரும் சத்தத்துடன் வானிலிருந்து விழுந்த நீல நிறத்திலான பொருள் ஒன்று வீட்டின் ஓட்டை உடைத்துக்கொண்டு வீழ்ந்தது. இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர், பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.**

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை கிராமத்தில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் பெரும் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பூநொச்சிமுனை பச்சை வீட்டுத்திட்டம் என்னும் குடியேற்ற கிராமத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது.

வீட்டின் அறையொன்றிலேயே குறித்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாரிய சேதங்கள் ஏற்படாத நிலையிலும் பெரும் சத்தம் மிக நீண்ட தூரத்துக்கு கேட்டதாக அப்பகுதி மக்கள் கூறினர்.

வானிலிருந்து விழுந்த நீல நிறத்திலான பொருள் ஒன்று வீட்டின் ஓட்டை உடைத்துக் கொண்டு சென்றதாக வீட்டில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் பொலிஸ் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் இராணுவத்தினரும் பொலிஸாரும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



## சைவத் தமிழ் முறைப்படி திருக்குடமுழுக்கு விழா

அம்பாறை, ஜூலை 17

அம்பாறை, வளத்தாப்பிட்டி ஆதி சிவன் ஆலய குடமுழுக்கு விழா சைவத் தமிழ் முறைப்படி சிறப்பாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

# பழங்குடி கிராம மாணவர்கள் பயணிப்பதற்கு வாகன வசதி

வெருகல், ஜூலை 17

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடி கிராம மாணவர்களுக்கு கல்வி வசதி வழங்க வள்ளுவம் அமைப்பு முன்வந்துள்ளது.

கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பாடசாலை இல்லை. மூன்று கிலோ மீற்றர் தொலைவில் மாவடிச்சேனை மற்றும் வெருகல் பாடசாலைகள் உள்ளன. இந்த மாணவர்கள் அங்கு சென்றுதான் கல்வி கற்க வேண்டிய நிலையுள்ளது.

அதனால் அங்குள்ள மாணவர்கள் மாதக்கணக்கில் பாடசாலைக்கு செல்லாமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையை உணர்ந்த வள்ளுவம் அமைப்பு தினமும் காலையில் இந்த மாணவர்களை மாவடிச்சேனை பாடசாலைக்கு கொண்டு செல்ல வாகன வசதியை வழங்கியுள்ளது. அதே போன்று, பாடசாலை முடிந்ததும் அவர்களை கிராமத்துக்கு கொண்டு வந்து சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

# நுகர்வோர் சட்டத்தை மீறிய 59 வர்த்தகர்களுக்கு அபராதம்

அம்பாறை, ஜூலை 17


அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 59 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 2 இலட்சத்து 20, 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ். என். எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டிய ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 100 வர்த்தகர்கள் கண்டறியப்பட்டனர். இதில் 59 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் நிர்ணயித்த விலையை விட பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றியமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கே இவ்வாறு நீதிமன்றங்களின் மூலம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கில் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு விழிப்புணர்வு செயல் திட்டம்





மூதூர், ஜூலை 17

கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் விழிப்புணர்வு செயல் திட்டத்தை கல்வி அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்ட விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை மூதூர் சோனையூர் கல்லூரி, சிறீ ஹன்பஹா வித்தியாலயம், இறங்குதுறை முகத்துவாரம் இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். (எ)

# சித்திரவேலாயுத சுவாமி கோவில் ஆடி அமாவாசை உற்சவம் நாளை

திருக்கோவில், ஜூலை 17

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் நாளை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இந்த உற்சவம் 18 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று ஒகஸ்ட் மாதம் நான்காம் 4ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

பிதிர்க்கடன் செலுத்தும் ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துபவர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# துவிச்சக்கரவண்டி சவாரி



அட்டாளைச்சேனை, ஜூலை 17

உலக துவிச்சக்கரவண்டி தினத்தை முன்னிட்டு ஒலுவில் வில்லேஜ் ரைடர்ஸ் கழகத்தால் "உடல் நலம் பேணலும் சுகமாக வாழ்தலும்" எனும் தொனிப் பொருளில் துவிச்சக்கரவண்டி சவாரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த துவிச்சக்கரவண்டி சவாரியானது அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்றலில் இருந்து ஆரம்பமானது.

பல இளைஞர்கள் இந்த துவிச்சக்கரவண்டி சவாரியில் இணைந்து கொண்டனர். (எ)

# விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து திட்ட முகாமைத்துவ குழுவில் ஆராய்வு

சம்மாந்துறை, ஜூலை 17

சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புகளின் சம்மேளனமான பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழு ஏற்பாடு செய்த சம்மாந்துறை பிரதேச புதிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கான வரவேற்பும் கௌரவிப்பும் நெய்னா காடு பிரதேசத்தில் நடைபெற்றது.

இதன்போது சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புகளும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கலந்துரையாடிய விவசாயிகள் அவற்றுக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டிய விடயங்களையும் எடுத்துரைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# துப்பாக்கி சூடு நடத்தியது யார்? எங்களுக்கு எல்லாம் தெரியும்!

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்

வாஷிங்டன், ஜூலை 17

**அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் நோக்கம் தெரியவில்லை. ஆனால், துப்பாக்கி சூடு நடத்தியது யார்? நோக்கம் என்ன? என்று எங்களுக்கு எல்லாம் தெரியும். விசாரணை நடந்து வருவதால் அது பற்றி இப்போது வெளிப்படுத்த விரும்பவில்லை- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.**

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் போட்டியிடுகிறார். எனவே, அவர் நாடு முழுவதும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த பயங்கர சம்பவத்தை தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது யார்? என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், இந்தத் தாக்குதலுக்கான நோக்கம் குறித்து தெரியவில்லை. விசாரணை அனைத்தும் தொடக்க நிலையிலேயே இருப்பதால் இந்த துப்பாக்கிச் சூட்டின் நோக்கம் அல்லது துப்பாக்கி தாரியின் தொடர்புகள் குறித்து



அமெரிக்கர்கள் யாரும் எந்த யூகங்களிலும் ஈடுபட வேண்டாம்.

அமெரிக்காவில் இதுபோன்ற வன்முறைக்கு இடமில்லை. இந்த வன்முறையை சாதாரணமானதாக கருதுவதை அனுமதிக்க முடியாது. தேர்தலில் நமது நம்பிக்கைகள் எவ்வளவு வலுவாக இருந்தாலும், வன்முறையில் ஒருபோதும் இறங்கக்கூடாது.

நாட்டில் அரசியல் வார்த்தைப்போர் பெரும் உச்சமடைந்து இருக்கிறது. அதை அமைதிப்படுத்த வேண்டிய நேரம் இது- என்றார். (எ)

# இம்ரான் கானின் கட்சியை தடை செய்ய அரசு திட்டம்

லாகூர், ஜூலை 17

இம்ரான் கானின் கட்சியை தடை செய்ய பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சப் கட்சியின் தலைவரான இம்ரான் கான், 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் பிரதமர் பதவியை இழந்த இம்ரான் கான் மீது ஊழல் முதல் பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்த வழக்குகளில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், இம்ரான் கானின் கட்சியின் முக்கிய நிர்வாகிகளுக்கு எதிராகவும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இம்ரான் கானின் கட்சி தேர்தலில் போட்டியிடவும் தேர்தல் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.


இந்த நிலையில், இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சப் கட்சியை தடை செய்ய பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. தேச விரோத செயல்களில் இந்தக் கட்சி ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டு பாகிஸ்தான் அரசு தடை செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது. (எ)

# முன்னாள் ஜனாதிபதியின் மகனுக்கு ஐந்து வருடங்கள் சிறைத் தண்டனை

அங்கோலா, ஜூலை 17

அங்கோலாவின் முன்னாள் ஜனாதிபதி ஜோஸ் எட்வேர்ட் டோஸ் சான்டோஸின் மகன் ஜோஸ் பிலோமெனோ டோஸ் சான் டோஸ்க்கு ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 5 வருட சிறைத் தண்டனையை அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

1979 முதல் 2017 ஆம் ஆண்டு வரை 38 வருடங்கள் அங்கோலாவின் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் ஜோஸ் எட்வேர்ட் டோஸ் டோஸ் சான்டோஸ். இவர் அதிகாரத்திலிருந்து விலகிய பின்னர், அவரின் குடும்பத்தினர் ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.



# அம்பானி மகனின் திருமணத்துக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவாம்!

மும்பை, ஜூலை 17

இந்தியாவின் முன்னிலை தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானியின் திருமணத்துக்கு இலங்கை மதிப்பில் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொழிலதிபர் முகேஷ் அம்பானி - நீடா அம்பானி தம்பதியின் மகன் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்ச்சன்ட் ஆகியோரின் திருமணம் வெகு விமர்சையாக நடந்து முடிந்துள்ளது. கடந்த ஓராண்டாகவே திருமணத்துக்கு முந்தைய நிகழ்ச்சிகள், சடங்குகள் நடைபெற்று வந்தன. அத்தோடு, கடந்த ஒரு மாதமாக பல்வேறு ஆடம்பர நிகழ்ச்சிகள் நடந்தன. (எ)

# சிறை தகர்ப்பு முயற்சி முறியடிப்பு 5 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

மொகதிசு, ஜூலை 17

சோமாலியாவில் முன்னெடுக்கப்பட்ட சிறை தகர்ப்பு முயற்சி முறியடிக்கப்பட்ட அதேவேளை, 5 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சோமாலியா தலைநகர் மொகதிசுவில் உள்ள மத்திய சிறையில் அல் - ஷபாப் பயங்கரவாதிகள் சிலர் சிறையை உடைத்து தப்பிக்க முயன்றனர். கைக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை பயன்படுத்தி அவர்கள் சிறையில் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனால் சிறையில் பெரும் பதற்றமான சூழல் உருவானது. பயங்கரவாதிகளின் சதி குறித்து தெரியவந்ததும் இராணுவத்தினர் உடனடியாக சிறைக்கு விரைந்தனர்.

அவர்கள் சிறையை சுற்றிவளைத்து தங்களின் பாதுகாப்புக்குள் கொண்டு வந்தனர். பின்னர் அவர்கள் சிறைக்குள் சென்று வன்முறையில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதே வேளையில் பயங்கரவாதிகள் கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்புக்கும் இடையேயான மோதல் நீண்டநேரம் தொடர்ந்தது. இறுதியில் வன்முறையை ஏற்படுத்தி சிறையிலிருந்து தப்ப முயன்ற 5 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதேசமயம் பயங்கரவாதிகளின் தாக்குதலில் 3 இராணுவத்தினர் பலியாகினர். மேலும் இந்த மோதலில் 18 கைதிகளும், 3 இராணுவத்தினரும் பலத்த காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ)

# சீனாவில் வீசா இன்றி தங்கும் நடைமுறை விரிவுபடுத்தல்

பீஜிங், ஜூலை 17

சீனாவில் வீசா இன்றி தங்கும் நடைமுறை மேலும் 2 விமான நிலையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சீனா வழியாக செல்லும் பயணிகளுக்கான வீசா நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இதன்படி மற்ற நாட்டுக்கு செல்லும் பயணிகள் சீனாவில் 144 மணி நேரம் அதாவது 6 நாட்கள் வரை சீனாவில் தங்கிக் கொள்ளலாம். மேலும், இதனைப் பயன்படுத்தி சீனாவை சுற்றியும் பார்க்க முடியும். இதன் மூலம் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட 54 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது ஹெனான் மாகாணம் செங்சூ சின்செங் விமான நிலையம், யுனான் மாகாணம் லிஜாங் விமான நிலையம் மற்றும் அங்குள்ள துறைமுகத்திலும் இந்த வீசா தளர்வு நடைமுறை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வீசா தளர்வு அளிக்கப்பட்டுள்ள விமான நிலையம் மற்றும் துறைமுகங்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. (எ)

# 8 மாதங்களில் இரு முறை என்னை கொல்ல முயற்சி

## எலான் மஸ்க் அதிர்ச்சி தகவல்

வாஷிங்டன், ஜூலை 17

8 மாதங்களில் இரண்டு முறை என்னைக் கொலை செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று உலகின் முன்னிலை பணக்காரரான எலான் மஸ்க் தெரிவித்தார்.

அமெரிக்காவில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தக் கொலை முயற்சி சம்பவம் அமெரிக்கா மட்டுமின்றி உலகம் முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் போன்ற நிறுவனங்களின் தலைவருமான எலான் மஸ்க், கடந்த 8 மாதங்களில் 2 முறை தன்னைக் கொலை செய்ய முயற்சி நடந்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஆபத்தான காலம் வரும். கடந்த 8 மாதங்களில் 2 முறை என்னைக் கொல்



வதற்கு முயற்சி நடந்துள்ளது. 2 பேர் தனித்தனி சந்தர்ப்பங்களில் என்னைக் கொலை செய்ய முயன்றனர். டெக்சாசில் உள்ள டெஸ்லா தலைமையகத்துக்கு அருகில் அவர்கள் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பொருளாதார கட்டமைப்பை சிதைப்பதற்குப் பலர் சூழ்ச்சி!

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 17

**நாட்டை முன்னேற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை சிதைப்பதற்கு நாட்டிலுள்ள பலர் முயற்சித்து வருகின்றனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.**



ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டின் அரசியல் கலாசாரம் மாறிவிட்டது. நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு குழு உருவானது.

அவர்கள் சம்பிரதாய அரசியலில் இருந்து விலகிச் செயல்பட்டனர். 2022 மே 09 ஆம் திகதி நடந்த சம்பவத்தைப் பற்றி நான் மீண்டும் குறிப்பிடத் தேவையில்லை.

நாட்டு மக்கள் ஒடுக்கப்பட்டதால், போராட்டங்கள் வெடித்தன. இந்த பிரசாரங்களை சிலர் பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். இறுதியில் சம்பிரதாய கட்சிகளால் நாட்டின் தலைமைத்துவத்துக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து விலகினார். அப்போது ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்கும் நிலையில் மொட்டுக் கட்சி இருக்கவில்லை. அந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர். இறுதியாக பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர். அப்போது அனைத்துக் கட்சித் தலைவர்களும் பாராளுமன்றத்துக்குள் இருந்தனர்.

இது தொடர்பாக அவர்களுக்கு இராணுவத் தளபதி அறிவித்தபோது, பிரதமர் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். அதுவும் பின்னர் இடம்பெற்றது. இதன் பின்னர் பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து நாட்டுக்காகப் பணியாற்றினர்- என்றார்.

(அ)

# கொத்து ரொட்டியின் விலை குறைந்தது!

கொழும்பு, ஜூலை 17

நாடளாவிய ரீதியில் உடன் அமுலுக்கு வரும் வகையில் உணவு வகைகள் சிலவற்றின் விலை குறைக்கப்படுவதாக சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

மின்சார கட்டணம் குறைக்கப்படும் நிலையில் இந்த விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதன்படி பிறைட் றைஸ், கொத்து ரொட்டி என்பன 25 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பராட்டா ரொட்டி, முட்டை ரொட்டி என்பன 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கிளப் வசந்தவின் மனைவி நிலைமை கவலைக்கிடம்!

கொழும்பு, ஜூலை 17

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த கிளப் வசந்தவின் மனைவியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு - அத்துருகிரிய பிரதேசத்தில், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பிரபல வர்த்தகரான கிளப் வசந்த என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த என்பவரும் அவரது பாதுகாவலரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில்அவரது உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)



# பிரபஞ்சம் 321 ஆவது கட்ட நிகழ்வில் ரிஷாத்,செல்வம் எம்.பிக்கள் பங்கேற்பு

மன்னார், ஜூலை 17

பிரபஞ்சம் திறன் வகுப்பறைகளை வழங்கும் திட்டத்தின் 321 ஆவது கட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வன்னி தேர்தல் மாவட்டம், மன்னார், தேவன்பிட்டிய றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ)

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மீளாய்வு செய்த கட்டணங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 17

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் மீளாய்வு செய்வதற்கான கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் புதிய கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரம் குறித்து 08-04-2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருந்தது

அங்கு அனைத்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான திருத்தங்களைச் செய்து புதிய கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை முன்வைக்க முடிவு செய்யப்பட்டது.

மேலும் 2025 ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட நீர் கட்டணக் கொள்கை மற்றும் திருத்தப்பட்ட நீர் கட்டண சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சர்கள் சபை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அடுத்த வாரத்தில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை!

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 17

வேதனப் பிரச்னையை முன்னிறுத்தி அடுத்த வாரம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அந்தச் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தங்களது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# ரின் மீன் இறக்குமதி தடை இருந்தும் 45 இலட்சம் ரின் மீன்கள் இறக்குமதி

## 50 மில்லியன் டொலர் செலவு

கொழும்பு, ஜூலை 17

ரின் மீன் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 45 இலட்சத்திற்கும் அதிகமான ரின் மீன்கள் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஷிரான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதற்காக செலவிட்ட தொகை 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் இரண்டு மில்லியன் டொலர் பெறுமதியான ரின் மீன்கள் இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரின் மீன்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ள நிலையில், சுங்கத்தினூடாக இவ்வளவு பெரிய தொகை எவ்வாறு நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை நடத்த… வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் உள்ள 16 ரின் மீன் தொழிற்சாலைகள் இடிந்து விழும் நிலையை அடைந்துள்ளதாக ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் கபில பாலசூரிய தெரிவித்துள்ளார்.

வற் வரியின்றி வெளிநாடுகளில் இருந்து ரின் மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், உள்ளூர் ரின் மீன்களுக்கு 18 வீத வற் விதிக்கப்பட்டாலும் உள்ளூர் தொழில்துறை வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# காலி சிறைச்சாலை செயற்பாடு நேற்று முதல் மட்டுப்படுத்தல்!

கொழும்பு, ஜூலை 17

காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை நேற்று முதல் மட்டுப்படுத்த சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மூளைக் காய்ச்சலால் கைதி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் கடந்த 13ஆம் திகதி உயிரிழந்துள்ளதுடன், பிரேத பரிசோதனையில் அவர் மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், மூளைக் காய்ச்சல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் மேலும் மூன்று கைதிகள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை ஒரு வாரத்திற்கு மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வைத்தியசாலையின் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மோப்ப நாய்கள் சகிதம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியவர்கள் என 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

(ஐ -02)

## கொக்குத்...

இதேவேளை, இந்த மனித புதைகுழி அகழ்வில் பங்கேற்ற அனைத்துத் தரப்பினரையும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், இது தொடர்பான வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன்.

மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட இந்த மனிதப் புதைகுழியில் 52 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அத்துடன், துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள், ரஷ்ய தயாரிப்பு நீர்சுத்திகரிப்பு கருவி, ஆடைகள், உள்ளாடைகள், விடுதலை புலிகள் அமைப்பு உறுப்பினர்களின் இலக்கத் தகடுகள், சயனைட் குப்பி என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் கடந்த 2023 ஜூன் 29ஆம் திகதி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தண்ணீர் குழாய் அமைப்பதற்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. இதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 6ஆம் திகதி இது மனித புதைகுழி என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி முன்னிலையில் தோண்டப்பட்டு உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் கட்ட அகழ்வு பணி ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மருத்துவர்...

அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா பேசுபொருளாகியிருந்தார். இந்த நிலையில், ஏனைய மருத்துவர்களுக்கு எதிராக அவதூறு பரப்பினார் என்று அவர்மீது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஐந்து முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அறிக்கையிட்டிருந்தனர். இது தொடர்பில் மருத்துவர் அர்ச்சுனாவை நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்படுமாறு உத்தரவிடப்பட்டது.

இதன்படி மருத்துவர் அர்ச்சுனா நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்பட்டார்.

வழக்கில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பணிமனைகளுக்குள் நுழையவும் மருத்துவமனை நிர்வாகத்தில் தலையிடவும் அர்ச்சுனாவுக்கு தடைவிதிக்கப்பட்டது. எனினும், மருத்துவமனை விடுதியில் தங்குவதற்கு மாத்திரம் அவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. அத்துடன், நேற்றைய நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பதிவிடவும் அல்லது நேரலை வெளியிடவும் நீதிவான் தடை விதித்தார்.

மேலும், அர்ச்சுனா மருத்துவர்கள் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இன்று புதன்கிழமை வாக்குமூலம் அளிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அவர் வாக்குமூலம் அளிக்காதபட்சத்தில் அவர் மீது வழக்கு தொடர முடியும் என்று பொலிஸாருக்கு தெரிவித்தார்.

தொடர்ந்து, அர்ச்சுனாவை 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிணையில் செல்ல அனுமதித்தார்.

நேற்றைய தினம் வழக்கு தாக்கல் செய்த மருத்துவர்கள் சார்பில் திருக்குமரன், குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர். மருத்துவர் அர்ச்சுனா தனக்காக சட்டத்தரணியை நியமித்திருக்கவில்லை.

(ஐ)

## அபுரத்தில்...

நிலநடுக்கத்தால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் கூறியுள்ளது. (ஐ)

## இந்த...

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய எதிர்வரும் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்கெடுப்பு திகதி, வேட்பு மனுக்களை கையேற்கும் திகதி, தேர்தல் அறிவித்தலை பிரகடனப்படுத்தும் திகதி ஆகியவற்றை தீர்மானிக்கும்போது பல விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்குதல், வாக்கெடுப்புடன் தொடர்புடைய சட்டரீதியிலான கடமைகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்குவதை போன்று அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு பொருத்தமான சூழலை கொண்ட ஒரு தினத்தை தீர்மானித்தல் குறித்து கவனத்தில் கொள்ளப்படும். ஏதேனும், காரணத்தால் வாக்கெடுப்பு நிலையம் ஒன்றில் வாக்கெடுப்பை இரத்துச் செய்ய நேரிட்டால் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் வாக்கெடுப்பை நடத்த குறைந்தபட்சம் 14 நாட்கள் தேவைப்படும்.

வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் காலப்பகுதி காலை 09 மணிமுதல் 11 மணிவரை என்று இரண்டு மணித்தியாலங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் பெயர் குறித்த வேட்பு மனுக்களை கையேற்கும்போது பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்படும் மத, சம்பிரதாயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பொது காரணிகள் காரணிகள், அரசமைப்பு ஏற்பாடுகள், ஜனாதிபதித் தேர்தல் சட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாக்கெடுப்பு திகதியை இந்த மாதத்தின் இறுதியில் அறிவிக்க முடியும். ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜூலை 17 ஆம் திகதி (இன்று) கிடைக்கப்பெறும் நிலையில் வாக்கெடுப்பு திகதியை ஆணைக்குழு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடு கின்றனர்.

அரசமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தை ஆராயும்போது நடைமுறை தன்மையை விளங்கிக்கொள்ள முடியும். இந்த மாத இறுதியில் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டவுடன் அன்றிலிருந்து 16 முதல் 21 நாட்களுக்குள் வேட்புமனு தாக்கலை பொறுப்பேற்கும் திகதியை அறிவிக்க வேண்டும். வேட்பு மனுக்களை பொறுப்பேற்ற திகதியிலிருந்து 4 முதல் 6 வாரங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு திகதியை அறிவிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் பணிகளுக்காக ஆரம்ப கட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் செலவுகள் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் இலங்கை அரசியலுக்கு புதிய அத்தியாயமாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டமையால் இந்த சட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் இந்த சட்டத்தை அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டு அதற்கு தேவையான பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் பேச்சுகள் நடைபெறுகின்றன. கடந்த தேர்தல்களின்போது மேற்கொள்ளப்பட்ட விதத்தில் தேர்தல் பிணக்குகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன- என்றார். (ஐ)

## தயாரிக்கப்பட்ட வெடிகுண்டு காத்தான்குடியில் பரீட்சிப்பு?

மட்டக்களப்பு, ஜூலை 17

காத்தான்குடியில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு பாவிக்கப்பட்ட வெடிகுண்டு சொந்தமாக தயாரிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதனை பரீட்சிக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

மட்டக்களப்பு - காத்தான்குடி - பூநொச்சிமுனையில் வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால், வீட்டின் ஓடுகள் உடைந்தபோதிலும் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த வெடிப்பு சம்பவம் தொடர்பில் தகவல் எதுவும் வெளிப்படாத நிலையில் நேற்று சம்பவ இடத்துக்கு சென்ற தடயவியல் பொலிஸார் நடத்திய சோதனையில் வெடிகுண்டே வெடிக்க வைக்கப்பட்டது என்பது தெரியவந்தது.

## உமாமகேஸ்வரனின்..

உறுப்பினருமான த. சித்தார்த்தன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைக் கழகத்தின் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

**யார் இந்த உமா மகேஸ்வரன்**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த போராளியான உமா மகேஸ்வரனின் இயற்பெயர் க. நல்லைநாதன் என்பதாகும். 1945 பெப்ரவரி 18ஆம் திகதி யாழ்ப்பாணம் - வறுத்தலைவிளானில் பிறந்தார். நில அளவையாளர் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக இவர் கொழும்பில் பணியாற்றினார்.

மிதவாத அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் தமிழர் விடுதலை கூட்டணியின் கொழும்பு கிளை செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

பின்னாளில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டதுடன், பலஸ்தீனத்தில் ஆயுதப் பயிற்சியும் பெற்றார். 1972ஆம் ஆண்டு புதிய தமிழ் புலிகள் அமைப்பில் இணைந்தார். புதிய புலிகள் அமைப்பு பின்னர் 1976ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றம் பெற்றது. இதன் முதலாவது தலைவராக இவரே தெரிவானார்.

பின்னாளில், உமா மகேஸ்வரன் - பிரபாகரன் முரண்பாட்டால் புலிகள் அமைப்பிலிருந்து விலகி 1980ஆம் ஆண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பை நிறுவியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## கிளிநொச்சியில்...

தூரம் துரத்திச் சென்ற பொலிஸார் பூநகரி பகுதியில் வைத்து டிப்பர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில், ஒருவர் காயமடைந்தார். காயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிப்பரில் பயணித்த இருவர் தப்பியோடிய நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மருத்துவர்...

அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா பேசுபொருளாகியிருந்தார். இந்த நிலையில், ஏனைய மருத்துவர்களுக்கு எதிராக அவதூறு பரப்பினார் என்று அவர்மீது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஐந்து முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அறிக்கையிட்டிருந்தனர். இது தொடர்பில் மருத்துவர் அர்ச்சுனாவை நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்படுமாறு உத்தரவிடப்பட்டது.

இதன்படி மருத்துவர் அர்ச்சுனா நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்பட்டார்.

வழக்கில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பணிமனைகளுக்குள் நுழையவும் மருத்துவமனை நிர்வாகத்தில் தலையிடவும் அர்ச்சுனாவுக்கு தடைவிதிக்கப்பட்டது. எனினும், மருத்துவமனை விடுதியில் தங்குவதற்கு மாத்திரம் அவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. அத்துடன், நேற்றைய நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பதிவிடவும் அல்லது நேரலை வெளியிடவும் நீதிவான் தடை விதித்தார்.

மேலும், அர்ச்சுனா மருத்துவர்கள் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இன்று புதன்கிழமை வாக்குமூலம் அளிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அவர் வாக்குமூலம் அளிக்காதபட்சத்தில் அவர் மீது வழக்கு தொடர முடியும் என்று பொலிஸாருக்கு தெரிவித்தார்.

தொடர்ந்து, அர்ச்சுனாவை 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிணையில் செல்ல அனுமதித்தார்.

நேற்றைய தினம் வழக்கு தாக்கல் செய்த மருத்துவர்கள் சார்பில் திருக்குமரன், குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

மருத்துவர் அர்ச்சுனா தனக்காக சட்டத்தரணியை நியமித்திருக்கவில்லை. (ஐ)

## பாரிஸில்...

ஒலிம்பிக் தீபம் அஞ்சலோட்டமாக வலம் வந்தபோது, பாரிஸ் 20 நிர்வாக பகுதியில் தர்சன் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி நடந்தார்.

மிக உணர்வுபூர்வமாக நடந்த இந்த நிகழ்வு பாரிஸ் வாழ் தமிழ் மக்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தர்சன் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி நடந்த தெருவில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் திரண்டிருந்தனர்.

ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய தர்சன் கடந்த 2006ஆம் ஆண்டு போர் காலத்தில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருந்தார். அங்கு, உணவகம் - வெதுப்பக துறையில் பணியாற்றிய அவர் கடந்த ஆண்டு பாரிஸ் வெதுப்பகங்கள் இடையே நடத்தப்பட்ட சிறந்த பக்கற் பாண் தயாரிப்பு போட்டியில் வென்று முதலிடம் பிடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசமைப்பில்...

நடத்துமாறு தேர்தல் ஆணையாளரை ஜனாதிபதி கோரவேண்டிய நிலைமை ஏற்படும். இதனால், நாடு சமாந்திரமாக இரண்டு தேசிய தேர்தல் களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். ஒரு தேர்தலின் பின்னர் மற்றுமொரு தேர்தல் நடை பெறும் இது குழப்பமான நிலையை ஏற்படுத்தும்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும். உள்ளூராட்சி தேர்தலை நடத்த நிதி இல்லை என்று கூறும் அரசாங்கம் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலத்தின் உச்சவரம்பை குறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

முன்மொழியப்பட்ட திருத்தம் தேவையில்லாமல் விடயங்களை குழப்பரமாக்கி தேர்தல் நடைமுறைகளை சீர்குலைய செய்யும் முயற்சியாக இருக்கலாம். எனவே, முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலம் தேர்தல் நடைமுறைகளை சூழ்ச்சித் திறத்துடன் கையாளும் முயற்சி. இதனை ஜனநாயக சக்திகள் எதிர்க்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தலை நடத்துவதற்கான முதற்கட்ட பணிகள் ஆரம்பம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 17**

**18 வயதைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் தேர்தலில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் 2024 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் பிரகாரம் 1 கோடியே 71 லட்சத்து 40 ஆயிரம் பேர் இதுவரை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ஏ.ரத்னாயக்க தெரிவித்தார்.**

அத்துடன் தேர்தல் கடமைகளுக்கு பயன்படுத்தப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பாக அரச அச்சகம், பொலிஸ் திணைக்களம், தபால் மா அதிபர் உள்ளிட்ட தரப்பினருடன் தாம் கலந்துரையாடி வருவதாகவும், இன்று நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் போக்குவரத்து, நீர், மின்சாரம் போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் தாம் கலந்துரையாடி வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்கும் சிறப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில்!

வியாழன் யாழ். நகரிலும் வெள்ளி அரியாலையிலும் நிகழ்வுகளில் பங்கேற்பர்




*யாழ்ப்பாணம், ஜூலை 17*

அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு விழாவின் ஓரங்கமாக நடைபெறும் இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்காக உலகப்புகழ் பெற்ற பேச்சாளர்களான பட்டிமன்றம் ராஜா, பாரதி பாஸ்கர் இருவரும் யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

நாளை வியாழன் மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இவர்கள் பங்கேற்கும் சொற்சமர் களம் இடம்பெறும். இந்நிகழ்வில் பாடசாலை விவாத அணிகளில் பங்கேற்போர் மற்றும் பட்டிமன்றங்களில் பங்கேற்போர் பயன்பெறும் வகையில் விவாத மேடையைக் கையாள்வது எப்படி என்ற பொருளில் இருவரும் கருத்துரைகளை வழங்குவர். இதில் ஆர்வம் உள்ள இரசிகர்கள் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோடீஸ்வரர் எலான் மஸ்க்கின் பிரதிநிதிகள் குழு இலங்கையில்!

## ஸ்டார்லிங்க் இணைப்பு விரைவில்

*கொழும்பு, ஜூலை 17*

ஸ்டார்லிங்க் செய்மதி இணையச் சேவை இணைப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக, கோடீஸ்வர தொழிலதிபர் எலான் மஸ்க்கின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

குறித்த இணையச் சேவை வழங்கலுக்கு வழி செய்யும் வகையில் அண்மையில் பாராளுமன்றில் தொலைத்தொடர்புகள் சட்டத்தில் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தியாவை தளமாகக் கொண்டுள்ள ஸ்டார்லிங்க் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கை வந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் தகவல்படி, எதிர்வரும் இரு வாரங்களுக்குள் ஸ்டார்லிங்க் இணைப்பை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யுனெஸ்கோ பணிப்பாளர் நேற்று கொழும்பு வருகை!



*கொழும்பு, ஜூலை 17*

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஓட்ரி அசோலே இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளார்.

அவர் கட்டார் எயார்வேஸ் விமானம் மூலம் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இலங்கை, யுனெஸ்கோவில் அங்கத்துவம் பெற்று 75 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவர் வருகை தந்துள்ளதுடன் நேற்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை இடம்பெறும் நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்பு!

*யாழ்ப்பாணம், ஜூலை 17*

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினரின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

தமக்கான வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வது மாத்திரமன்றி எதிர்கால இளைய தலைமுறைகளும் இதுபோன்ற வேலையற்ற நிலையை எதிர்கொள்ளக் கூடாது என்பதே தமது கவனயீர்ப்பின் பிரதான நோக்கம் என வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

அதற்கேற்ற வகையிலான கல்விச் சீர்திருத்தையும் வலியுறுத்தவதாக, வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

தமது கோரிக்கை வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சசிகரன், மன்னார் மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ஜெயசீலன் சந்திரகாசன் மற்றும் யாழ்.மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)




# அரசமைப்பின் 83ஆவது சரத்து: திருத்த அமைச்சரவை அனுமதி



*கொழும்பு, ஜூலை 17*

அரசியலமைப்பின் 83ஆவது சரத்தின் ஆ பிரிவை திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாள ருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த பந்துல குணவர்த்தன-

அரசியலமைப்பின் 83ஆவது சரத்தின் ஆ பிரிவில் ஆறு வருடங்களுக்கு மே எனக் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லுக்கு பதிலாக ஐந்து வருடங்களுக்கு மேல் என குறிப்பிடவேண்டுமென்ற அமைச்சரவை யோசனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ஆகியோர் இணைந்து கூட்டான சமர்ப்பித்தனர்.

இந்த யோசனைக்கு கொள்கை ரீதியான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், விரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். இந்தத் திருத்தச்சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது." என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி வழங்குவது அரசின் பொறுப்பு

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

*கொழும்பு, ஜூலை 17*

'நாட்டில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் நிவாரணங்களுக்காக அரசாங்கம் பல பில்லியன் ரூபாவை செலவு செய்து வருகிறது.

அதனால், தேர்தலுக்கு நிதிச் சிக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி தற்போது வரை, பாராளுமன்றத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே, நிதி இருக்கிறதா இல்லையா என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் தேர்தல் ஆணைக்குழு கேள்வி எழுப்புவதற்கான எந்த அவசியமும் இல்லை' என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் இதுவரை பல்வேறு தீர்ப்புகளை பெற்றுக்கொடுத்துள்ளது. இருந்தபோதும், தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தேர்தலை நடத்துவதற்கு இடையூறாக இருக்குமென நாங்கள் நம்பவில்லை.

தேர்தலை நடத்துவது தொடர்பில் ஏராளமான முந்தைய நீதிமன்ற தீர்ப்புகளும் எங்களிடம் இருக்கின்றன.

அதேபோன்று, இன்னும் இரு தினங்களில் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துவிடும். எனவே, எதிர்வரும் இருதினங்களின் பின்னர் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமென நம்புகிறோம். அதேபோன்று அரசியலமைப்பினூடாக அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பையும் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

அத்துடன், தேர்தலை நடத்துவதற்கான நிதி இருக்கிறதா என்பது தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு, அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இருந்தபோதும், நிதி இருக்கிறதா இல்லையா என்பது தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கான எந்த அவசியமும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி தற்போது வரையில், அரசியலமைப்பின் அடிப்படையில் பாராளுமன்றத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. அந்த நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு நிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு நிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org